**தலைப்பு 210 – அரசாங்க தகவல் திணைக்களம்**
**-------------------------------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 210 – அரசாங்க தகவல் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரசாங்க தகவல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 14 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 13 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க தகவல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக

ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | சொத்தொன்றுக்குரிய எதிர்கால பொருளாதார ரீதியில் நலன்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றமை மயை உறுதிப்படுத்துதல் மற்றும் அந்த சொத்துக்களில் வெளிப்படையாக அளவிடக்கூடிய தன்மையினை மாத்திரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களாக இனங்காணப்பட வேண்டியிருந்ததுடன் அவ்வாறு இல்லாத சந்தர்ப்பங்களின் போது | பிரான்ஸ் அரசாங்கத்திலிருந்து கடன் உதவியின் கீழ் கிடைத்த பிரான்ஸ் பிராங்க் 9,150,000 யூரோ 1,442,601 பெறுமதியுடைய Debri வர்ண ஆய்வுகூட இயந்திரம் முன்னர் காணப்பட்ட அந்நிய செலாவணி விகிதத்தின் பிரகாரம் ரூபா 160 மில்லியன் அளவான பெறுமதியில் காணப்பட்டது. திணைக்களத்தின் கிரயத்தை இனங்காண முடியாத சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்காக நியமிக்கப்பட்ட | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களாக இனங்காணப்படல் வேண்டும். பிரான்ஸ் நிறுவனத்திலிருந்து கிடைத்திருந்த போதும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் காணப்படுகின்ற நிறஆய்வுகூட இயந்திரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் இந்த சொத்துக்களின் மீள் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 12 மில்லியனாக காண்பிக்கப்பட்டமையினால் அப்பெறுமதியால் சொத்துக்களின் பெறுமதி அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | குழுவினால் பல்வேறு விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பக் கிரயத்தில் 7.5 சதவீதமான மிகவும் குறைந்த பெறுமதியில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | |
| (ii) | 2018 திசெம்பர் 31 ஆம் திகதிய இலக்கம் 04/2018 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு 05 வருடங்களுக்கு ஒரு தடைவ காணி மற்றும் கட்டிடங்கள் மீண்டும் மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 300,848,000 தொகையும், காணிகளின் பெறுமதி ரூபா 1,227,750,000 தொகையும் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் இந்த சொத்துக்கள் 2017 ஆம் ஆண்டின் பின்னர் மதிப்பீடு செய்து தற்போதய பெறுமதியின் கீழ் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த திணைக்களத்திற்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் மீண்டும் மதிப்பீடு செய்வதற்காக 2023 யூன் 19 ஆந் திகதி அரசாங்கத்தின் மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் கோரப்பட்ட போது அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் ஆலோசனையின் பிரகாரம் முதலாவது சுற்றில் மதிப்பீட்டுப் பெறுமதி கணக்கீடு செய்து இறுதி வரையும் இரண்டாவது சுற்றின் மதிப்பீடு கோருவதற்காக மதிப்பீட்டு அறிக்கை வழங்கப்படாதிருந்தமையும் அறிவிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்கள் இருவரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 179,740 ஆன கடன் மீதி 20 வருடங்களை விஞ்சி காணப்பட்ட போதும் 2024 ஏப்ரல் 30 கணக்காய்வு திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 மார்ச் 12 ஆந் திகதி ஒரு உத்தியோகத்தரின் கடன் பணத்தை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. மற்றய உத்தியோகத்தர் பெற்ற கடன் தொகை தொடர்பாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் அந்தக் கடன் தொகையைச் செலுத்துமாறு அந்த உத்தியோகத்தருக்கு கிராம உத்தியோகத்தர் மூலம் அறிவிக்குமாறும், அவரின் சொத்து அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கொரண பிரதேச செயலாளருக்கு 2024 ஏப்ரல் 05 ஆந் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. | கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஒரு செலவின விடயம் ஒன்றில் 100 சதவீதமும், 13 செலவின விடயங்களில் 62 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிப்பு காணப்பட்டது. | திணைக்களத்தின் வாகனங்களின் தேவையினை நிறைவேற்றுதல், செலவினக் கட்டுப்பாட்டு சுற்றறிக்கை, அத்தியாவசிய பராமரிப்பு நடவடிக்கைகள் மாத்திரம் மேற்கொள்ளல், உத்தியோகத்தர்கள் சம்பளம் இன்றிய விடுமுறைகளைப் பெற்றுக் கொள்ளல், இடமாற்றத்தை பெற்றுச் சென்றமை இதற்காக தாக்கமளித்திருந்தது. | மதிப்பீடு சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 04 செலவின விடயஙடகளின் நிதியேற்பாட்டில் நிதிப்பிரமாணம் 66 மூலம் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்ட பின்னர் 17 சதவீதம் முதல் 83 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிப்பு காணப்பட்டது. | உத்தியோகத்தர்கள் சம்பளம் அற்ற விடுமுறை பெற்றுக் செல்லல், இடமாற்றத்தை பெற்றுச் செல்லல், செலவினக் கட்டுப்பாட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்ததன் அடிப்படையில் இந்த நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | மதிப்பீடு சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் | பெறுமதி ரூபா | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 2017 நவம்பர் 07 ஆந் திகதிய இலக்கம் 22/99 (XXXIII) என்ற அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 1.3.1 | 63,402 | அலுவலகம் மற்றும் வீடுகளுக்கிடையே உத்தியோகபூர்வ குழாம் வாகன வசதிகள் உரித்தின்றி அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியில் உள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு போக்குவரத்து வசதிகள் வழங்கியதற்காக 04 மாத காலத்திற்காக 1350 Km இற்கு ரூபா 63,402 எரிபொருள் செலவினம் செய்யப்பட்டிருந்தது. | உரிய அங்கீகாரம் பணிப்பாளர் நாயகத்தால் எழுத்து மூலம் வழங்கப்பட்டுள்ளதுடன் பணிப்பாளர் நாயக அலுவலகம் முற்பகல் 8.30 மணிக்கு முன்னர் திறப்பதற்கும் மற்றும் பிற்பகல் 6.00 மணி வரை திறந்து வைப்பதற்கும் தேவை ஏற்பட்டமையால் ஆலோசனையின் பிரகாரம் அந்த போக்குவரத்து வசதி வழங்கப்பட்டிருந்தது. | அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 01/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் I ஆம் பகுதியின் 9 | 490,280 | செயல் நிமித்த உபகட்டுநிதி பெற்ற பதவி நிலை உத்தியோகத்தரால் அந்த பணிகள் முடிவடைந்து 10 நாட்களுக்குள் அந்த உபகட்டுநிதி தீர்த்து வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் | தீர்க்கும் உறுதிச் சீட்டுக்களில் காணப்படுகின்ற சில குறைபாடுகளினால் சில முற்பணங்கள் தீர்ப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையைக் கட்டுப்படுத்திக் | அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | இன் மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமானம் 371(5) ஆம் பந்தி | கூட்டுமொத்தமாக ரூபா 490,280 ஆன 09 முற்பணங்கள் 20 நாட்கள் முதல் 54 நாட்கள் வரையிலான காலவீச்சில் தாமதித்து தீர்க்கப்பட்டிருந்தது. | கொள்வதற்கு தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 02/2002 | வருடாந்த செயலாற்றல் அறிக்கை மும்மொழிகளிலும் தயாரித்து நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்கள் கழிவதற்கு முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக குறித்துரைத்த ஏற்பாடுகளின் கீழ் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டின் அறிக்கை 2024 மே 31 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2022 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கையில் மொழிபெயர்ப்பு நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தில் காணப்படுவதுடன் முடிவடைந்தவுடன் சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள து. | அரச நிதிச் சுற்றறிக்கை யின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.3 வைப்பு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| கொடுப்பனவுகள் குறித்துரைத்த ரீதியில் உறுப்படுத்தப்படாத நிர்மாணப் பணிகளுக்காக அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 2,251,226 பெறுமதியான 02 காசோலைகள் 2020 ஆம் ஆண்டு முதல் பொது வைப்புக் கணக்கில் வைப்பு செய்யப்பட்டு அவை ரிக்விஷன் பத்திரம் மூலம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் பொது வைப்புக் கணக்கிலிருந்து அகற்றப்பட்டு காசோலை | அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் பொறியியலாளர் பரிந்துரையில் அனுப்பப்பட்ட ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு செலவினங்களை உறுதிப்படுத்தி காசோலை எழுதப்பட்டிருந்தது. எனினும் இந்த நிர்மாணங்கள் தொடர்பாக அனேகமான பிரச்சனைகள் காணப்படுவதுடன் பல்வேறு விமர்சனங்களும் எழுந்திருந்தமையால் காசோலை விநியோகப்படாமல் சமர்ப்பிக்கப்பட்ட அளவிடை அறிக்கை மீண்டும் பரீட்சிக்கப்பட்டதுடன் அதன் போது அவர்களினால் | கொடுப்பனவுகளை குறித்துரைத்தவாறு உறுதிப்படுத்தி காசோலைகள் எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| எழுதி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | சமர்ப்பிக்கப்பட்ட அளவிடைப் பத்திரங்களில் காணப்பட்ட இணக்கமின்மைகளின் காரணமாக முழுமையாக நிர்மாணிப்பதற்குரிய அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளும் வரை கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டு காசோலைகள் தொடர்ந்தும் நிறுத்தி வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. | |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதி சுற்றறிக்கையின் வழிகாட்டியின் இலக்கம் 12 இன் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய கால அட்டவணை மற்றும் எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி/ பெறுபேறுகள் (Output/ Outcome), உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் போன்ற தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட கால அட்டவணை, காலாண்டு ரீதியில் தயாரிக்கப்பட்டுள்ளது. சில பணிகளுக்காக தவறினால் எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி / விளைவுகள் காண்பிக்கப்படவில்லை. 2023 ஆம் ஆண்டின் நடுஅரைப் பகுதியில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டின் போது இந்த விடயங்களை சரியாகத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் விடயங்களை உள்ளடக்கி செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

**3.2 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| செயல்நடவடிக்கைத் திட்டத்தில் 37 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது. | உரிய உத்தியோகத்தரின் ஆலோசனை கிடைக்காமை, செலவினக் கட்டுப்பாட்டிற்காக விநியோகிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் மற்றும் அமுல்படுத்துவதற்காக போதியளவான வசதிகளுடன் உள்ள பதவியணியினர் காணப்படாமை போன்ற | நடைமுறை ரீதியிலான பிரச்சனைகளை கவனத்தில் கொண்டு செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரித்து அதில் உள்ளடக்கப்பட்ட சகல பணிகளும் |

| | | |
|---|---|---|
| | விடயங்களின் காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. | நிறைவேற்றப்படல் வேண்டும். |

**3.3 எதிர்பார்க்கப்பட்ட பூரத்தி மற்றும் பெற்றுக்கொள்ளப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 23 செயற்பாடுகளின் செயலாற்றல் 50 சதவீதமான குறைந்த மட்டத்தில் பௌதீக செயல் முன்னேற்றம் பெறப்பட்டிருந்தது. அதில் அமுல்படுத்தப்பட்ட நிதி செயல்முன்னேற்றம் 99 சதவீதம் காணப்பட்ட போதும் எந்த ஒரு பௌதீக செயல் முன்னேற்றமும் பெறப்பட்டிருக்கவில்லை. | நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் செலவினங்களை கட்டுப்படுத்துவதற்காக விநியோகிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் மற்றும் மனித வளங்கள் போதியளவில் இல்லாமை | நடைமுறை ரீதியிலான பிரச்சனைகளை கவனத்தில் கொண்டு செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்து அதில் உள்ளடக்கப்பட்ட சகல பணிகளும் நிறைவேற்றப்படல் வேண்டும். |

**3.4 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் சகல கணக்கீட்டு உத்தியோகத்தர்களினாலும் தமது நிறுவனத்துக்கு கையிளிக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் பணிகளின் பிரகாரம் எதிர்வரும் ஆண்டின் மீண்டெழும் மற்றும் மூலதன நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கான வருடாந்த பெறுகைத் திட்டம் நடப்பாண்டின் திசெம்பர் 10 ஆந் திகதிக்கு முன்னர் குறித்துரைத்த படிவத்தில் தயாரிக்கப்பட்டு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்தைப் பெற்று | 2023 ஆம் ஆண்டிற்கான பெறுகைத்திட்டம் 2023 சனவரி 04 ஆந் திகதி அமைச்சின் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும் தாமத வழுக்களினால் அந்த பெறுகைகள் ஆணைக்குழுவிற்கும், கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அனுப்புவதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுகைகள் ஆணைக்குழு, கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் அரச நிதி திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டுக்குரிய பெறுகைத் திட்டம் 2023 யூலை 14 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பந்தியின் பிரகாரம் ஆகக் குறைந்தது 03 வருடகாலத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகள் பட்டியலிடப்பட்டு பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்க வேண்டியிருந்ததுடன் ஆண்டிற்கான பெறுகைத் திட்டம் விரிவான ரீதியில் தயாரிக்கப்படல் வேண்டும். எனினும் திணைக்களம் தயாரித்த பெறுகைத் திட்டம் 2023 ஆம் ஆண்டுக்காக மாத்திரம் தயாரிக்கப்பட்ட ஒன்றாகும். ஆதன் காரணமாக பெறுகைத் திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். ஏதிர்வரும் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பிரதான பெறுகைத் திட்டம் மற்றும் ஆண்டிற்கான பெறுகைத் திட்டம் விரிவாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2021 யூலை 28 ஆந் திகதிய தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இன் 2.3(அ) 1 ஆம் பந்தியின் பிரகாரம் புதிய கட்டிட நிர்மாணித்தல் தற்காலிகமாக கைவிடப்பட்டிருக்கும் போது ரூபா 3,799,932 தொகையில் (வற் இன்றி) மலசலகூட முறைமையை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் போது ஆலோசனை நிறுவனம் மற்றும் ஒப்பந்த நிறுவனங்களை தெரிவு செய்வதற்காக குறித்துரைத்த பெறுகை நடைமுறைகள் | இந்த மலசலகூட முறைமைக்குரிய BOQ தயாரிப்பதற்காக தொழில் தகைமை பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் இந்த திணைக்களத்தில் காணப்படாமையினால் முன்னாள் ஊடாக அபிவிருத்தி நிலைய கட்டிடம் நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக ஆலோசனை சேவை வழங்கிய நிறுவனத்தின் சேவையை பெற்றுக் கொள்வதற்கு | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பின்பற்றப்பட்டிருக்கவில்லை. ஆலோசனை நிறுவனத்தின் நிர்மாணம் தொடர்பான திட்டம், மாதிரிகள், அளவிடைப் பத்திரம் மற்றும் கொடுப்பனவு அறிக்கை தயாரித்தலில் குறைபாடு காணப்பட்டதன் காரணமாக அந்த ஆலோசனை நிறுவனத்தின் சேவையினைப் பெற்றுக்கொள்வதை கைவிடப்பட்டு மிகுதி பகுதிக்காக வேறொரு நிறுவனத்திலிருந்து ரூபா 2,084,081 தொகையில் (வற் இன்றி) ஆலோசனை சேவை பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த நிறுவனத்தின் குறைபாடுகளும் அவதானிக்கப்பட்டதுடன் 2024 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் ரூபா 1,649,401 செலுத்தப்பட்டிருந்த போதிலும் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் குழுவின் மேவுகை அங்கீகாரத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிர்மாணம் தொடர்பாக பல்வேறு பிரச்சினைகள் மற்றும் குறபைாடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் இந்தப் பிரச்சினைகள் மற்றும் குறைபாடுகளைத் தீர்ப்பதற்காக ஒன்றினைந்த குழு கூட்டம் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் நடாத்தப்பட்டிருந்தது. | |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தரமான நியமத்தை உடைய திரைப்படங்களை தயாரிக்கும் நோக்கில் 1999 திசெம்பர் 10 ஆந் திகதி Debri நிறுவனம் மற்றும் தகவல் திணைக்களத்துடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் பிரான்ஸ் அரசாங்கத்திடமிருந்து கிடைத்த கடன் உதவியின் கீழ் பிராங் 9,150,000 (யூரோ 1,442,601) தொகைக்கு சமமான ரூபா 102.2 மில்லியன் தொகையில் 2003 | இந்த இயந்திரத்தின் தொழில்நுட்பம் காலாவதியாகி இருந்தமையால் எதிர்காலத்தில் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படவில்லை. இது தொடர்பாக அறிவித்து நிதி அமைச்சிற்கு ஆலோசனைக்காக அனுப்பப்பட்டுள்ளதுடன் இதற்காக விசேட அறிவுடைய நபரையும் உள்ளடக்கி மூன்று | சொத்துக்கள் விளைவற்று வைக்காமல் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்ட ஆய்வுகூட இயந்திர உபகரணத்தொகுதி கொண்டு வரும் போது உரிய பிரகாரம் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளாமையின் காரணமாக 2024 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையும் விளைவற்றுக் காணப்பட்டது. இந்த இயந்திர உபகரணத் தொகுதிகளை ஸ்தாபிப்பதற்காக திணைக்களத்தின் கணிசமான நிலஅளவுடன் கட்டிடம் ஒன்று பயன்படுத்தப்பட்டமையால் அந்த கட்டிடத்திலிருந்து கிடைத்த குறைப்பயன்பாடான சொத்தாக உட்பட்டிருந்தது. மேலும் இந்த ஆய்வுகூட கட்டிடத்தில் நீண்டகாலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத 85 சொத்து விடயங்கள் விளைவற்று காணப்பட்டது. | பேருக்கு குறையாத குழுவொன்று நியமித்து முழுமையான விசாரணை மேற்கொண்டு Debri ஆய்வுகூட இயந்திர உபகரண தொகுதி தொடர்பாக எடுக்கக்கூடிய மாற்று வழிகள் என்ன என்பதனை காண்பிக்குமாறு கொம்ரோலர் நாயகம் அலுவலகத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட பொருள் மென்மையாய்வு அறிக்கையில் பற்றாக்குறையான 12 வகைகளுக்காக உத்தேசிக்கப்பட்ட செயற்பாடாக விசாரணைகள் மேற்கொள்ள வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் அந்த பற்றாக்குறை தொடர்பாக 2021 ஆம் ஆண்டு முதல் இதுவரை உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு திணைக்களம் தவறியிருந்தது. | 2021 பொருள் மெய்மையாய்விற்கு உரியதாக இனங்காணப்பட்ட சகல பற்றாக்குறைகளும் மற்றும் மிகைகளும் 2023 இன் பொருள் மெய்மையாய்வின் போது தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. | பற்றாக்குறை தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.6 நட்டம் மற்றும் இழப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டின் போது 04 வாகன விபத்துக்களில் ரூபா 223,300 நட்டம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 93,500 அறவிடப்பட்டிருக்கவில்லை. | 19-7483 வாகனத்தின் நீதிமன்ற நடவடிக்கைகள் பூர்த்தியடையாமையினால் அதற்குரிய நட்டத்தினை தீர்ப்பதற்கு தாமதமடைந்துள்ளது. | பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து நட்டத்தை அறிவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | திணைக்கள களஞ்சியத்தில் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் 73,167 இரண்டு வார நாளிதழ் விற்பனை செய்யப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்ததுடன் அதன் விற்பனைப் பெறுமதி ரூபா 4,099,620 ஆகும். | வருடாந்தம் மீதியாகின்ற நாளிதழ்கள் அரசாங்கத்தால் நடாத்தப்படுகின்ற விழாக்கள் மற்றும் ஏனைய அரச செயற்பாடுகளின் போது விற்பனை செய்தல் பொதுவாக மேற்கொள்ளப்படுவதுடன் மக்களுக்கு இலவசமாகவும் வழங்கப்பட்டுள்ளது. விற்பனை செய்யப்படாதுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ள நாளிதழ்கள் 12 வருடங்கள் அளவிலான காலத்தில் இருந்து ஒன்று சேர்ந்திருந்த நாளிதழ்கள் ஆகும். | மிகுதி இருப்புக்களை காலரீதியில் கவனத்தில் கொண்டு அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 03 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அவற்றை அடைந்து கொள்வதற்கு தேவையான வளங்கள் மற்றும் இயலளவு தொடர்ச்சியாக பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்த ஆபத்தை இனங்காணல் மற்றும் அந்த ஆபத்துக்களைக் குறைப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் ஆக உரிய திட்டங்களைத் | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | இனங்காணப்பட்ட அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை விரைவாக அமுல்படுத்துதல் வேண்டும். |

தயாரித்தல், உத்தியோகத்தர்களுக்கு அறிவித்தல், தேவையான தீர்வுகள் மற்றும் தீர்மானங்களை அமுல்படுத்துதல் போன்றவைகளுக்காக குழுவொன்று நியமிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. நல்லாளுகை

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 திசெம்பர் 24 ஆந் திகதிய இலக்கம் DMA/01-2019(1) என்ற முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் எதிர்வரும் ஆண்டுக்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் ஆபத்துக்களை அடிப்படையாகக் கொண்ட உள்ளகக் கணக்காய்வுத் திட்டமாக தயாரித்து அதன் பிரதிகள் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் 2023 நவம்பர் 27 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | அரசாங்க தகவல் திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்படாதிருந்ததுடன் 2023 ஏப்ரல் 03 ஆந் திகதி முதல் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை நியமித்ததன் பின்னர் 2023 யூன் 14 ஆந் திகதி பொருத்தமான உதவி உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு உள்ளகக் கணக்காய்வு அலகு ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அதனால் இறுதிக் காலாண்டிற்காக கணக்காய்வுத் திட்டம் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2023 ஏப்ரல் 03 ஆந் திகதிய திணைக்களத்துக்காக உள்ளகக் கணக்காய்வாரள் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் போது உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளின் செயல்முன்னேம் 14 சதவீதத்திற்கு குறைவான மட்டத்தில் காணப்பட்டது. | 2023 ஏப்ரல் 03 ஆந் திகதி முதல் உள்ளகக் கணக்காய்வாளரும் 2023 யூன் 14 ஆந் திகதி உதவி உத்தியோகத்தரும் நியமிக்கப்பட்ட போதும் திணைக்களத்தின் தாபனக் கட்டமைப்பு மற்றும் திணைக்கள முறைமைகள், உள்ளகக் கட்டுபாட்டுத் திட்டம் மற்றும் குறிக்கோள்களைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் ஆய்வு செய்வதற்காக கணிசமான காலம் எடுத்தமையால் அந்தக் காலத்தில் அறிக்கை விநியோகிப்பதற்கு முடியாதிருந்தது. | உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளின் செயல் முன்னேற்றத்தை மேலோங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 6. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் சிரேஸ்ட நிலை, மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலைகளின் வெற்றிடங்கள் 121 ஆக காணப்பட்டதுடன் அந்த நிலைமையின் காரணமாக ஆக்கபூர்வமான சேவை மட்டத்தைப் பேணிச் செல்வதற்காக அது தாக்கமளித்திருந்தது. | தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் மூலம் அரச செலவினங்களை கட்டுப்படுத்துதலின் கீழ் ஆட்சேர்த்தல் தற்காலிகமாக நிறுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தமையினால் பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை சேர்த்தல் அறிவித்தல் வரும் வரை காலம் தாழ்த்தப்பட்டிருந்தது. | ஆக்கபூர்வமாக சேவையினை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |